விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | வைகாசி 16 | ரம்ழா 8 | இதழ் 108
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 29-5-1985

## அரசின் மூன்று முக்கிய யோசனைகள்——
# மூன்று எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

நாட்டில் ராணுவ சட்டத்தை அமுல் நடத்துவது, எம். பிக்களுக்கு நிர்வாக அதிகாரங்கள் வழங்குதது, விசேஷ துணைபடை அமைப்பது ஆகிய அரசின் யோசனைகளை இலங்கை சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, [illegible] சிறிலங்கா சுதந்திர மக்கள் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் கூட்டாக கண்டித்துள்ளன.

இக்கட்சிகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் சகல மக்களையும், ஸ்தாபனங்களையும், கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் தங்களோடு இணைந்து அரசின் இம்முயற்சியை எதிர்க்கும்படி கோரியுள்ளன.

அரசின் இந்த யோசனைகள் நாட்டின் ஜனநாயகத்தை அழித்துவிடும் என்றும் துணைபடை அமைப்பதானது யு. என். பி.யின் சொந்தப்படையாகவே அமைந்துவிடக்கூடும் என்றும் இக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

## கூட்டணித் தலைவர்கள் புதுடில்லி விரைவு

[புதுடில்லி]

ஆஸ்திரேலியா விலிருந்து தமிழ்நாடு திரும்பியகையோடு இலங்கைத் தமிழ் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம், தமது சகாக்களான எம். சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியவர்களுடன் புதுடில்லிக்கு விரைந்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

# ஜே. ஆர். - ரஜீவ் சந்திப்பு கேரளாவில் நடக்கும்?

## புதுடில்லியில் பலத்த ஹேஷ்யம்

(புதுடில்லி)

**இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இந்திய பிரதம மந்திரி திரு. ரஜீவ்காந்தியும் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக கேரள மாநிலத்தில் சந்தித்துப் பேசக்கூடும் என்று ராஜீய வட்டாரங்களில் கருதப்படுகிறது.**

அனேகமாக எதிர்வரும் திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறலாம் என்றும், அதற்கான முடிவு இப்பொழுது இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ்பண்டாரி கொழும்பில் நடத்தும் பேச்சுக்களின்போது எடுக்கப்படும் என்றும் கருதப்படுகின்றது.

புதுடில்லி அல்லாத வேறு இடத்தில் இச்சந்திப்பு நிகழ்வதை இலங்கை ஜனாதிபதி விருப்பம் கொண்டிருப்பதாலும் இலங்கைக்கு அருகிலேயே கேரளம் இருப்பதாலும் இந்திய பிரதம மந்திரி திரு ரஜீவ் காந்தி கேரள மாநிலத்துக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் மேற்கொள்ளும் போது இலங்கை ஜனாதிபதியும் அங்கு விஜயம் செய்யக்கூடும் என்று இந்திய ராஜதந்திர வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது. ஒன்றை மேற்கொண்டு ஜூன் ஐந்தாம் திகதி திரு. ரஜீவ் காந்தி 2 வார விஜயம் பிரான்ஸ், அல்ஜீரியா அமெ

[6-ம் பக்கம் பார்க்க]

## இளைஞன் சுடப்பட்டு மரணம்

[வவனியா]

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு என்ற இடத்தில் ஒரு இளைஞன் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

## கோட்டைப் பகுதியில் நடந்த ‘சிரமதானம்’

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டைப்புற நிலப் பரப்பில் [முற்றவெளிஉட்பட] படர்ந்து செழித்து வளர்ந்திருந்த புல்-புதர்-பற்றைகளை வெட்டி அழிப்பதில் நேற்று பல இளைஞர்கள் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்

ஸ்ரான்லி வீதி பஸ் நிலையம் ஆகிய இடங்களில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்களே அச் ‘சிரமதான’ வேலைக்குப் பணிக்கப்பட்டார்களாம்.

தகிக்கும் வெயிலில் இளைஞர்கள் சிரமதான வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

கராஜ் ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்த லொறியொன்று மறிக்கப்பட்டு அதில் குறிப்பிட்ட இளைஞர்கள் கொண்டுசெல்லப்பட்டார்களாம். (மா)

## “ஆள் கடத்தலும் வீடெரித்தலும் நிறுத்தப்படவேண்டும்” — மட்டு. அரச அதிபர்

[கொழும்பு]

மட்டக்களப்புப் பகுதியில் இடம்பெற்றுவரும் ஆள்கடத்தல்களும் வீடு எரிப்புகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் சமூகங்களுக்கிடையில் சௌஜன்யம் ஏற்பட இதுமுக்கியமாகும் உன்றும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. அந்தோனி

[6ம் பக்கம் பார்க்க]

## வவனியா—மன்னார் வீதியில் நடந்துள்ள கொள்ளை

[வவனியா]

வவனியா மன்னார் வீதியில் பம்பைமடுவுக்கு அப்பால் கடந்த சனிக்கிழமை காலை இருகொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மன்னாருக்கு நெல்லு கொள்வனவுசெய்ய சென்ற இரு தனியார் லொறிகள் மறிக்கப்பட்டு ரொக்கப்பணம்கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது;

ஒரு லொறியிலிருந்து 25ஆயிரம் ரூபாவும், மற்ற லொறியிலிருந்து 40 ஆயிரம் ரூபாவும்

[6ம் பக்கம் பார்க்க]

## சரித்திரக் கட்டிடம் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த புராதன கட்டிடம் ஒன்று சேதப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இக்கட்டிடம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## அனுராதபுரத்தில்—— பாதிப்புற்றவர்களுக்கு உதவ இணைப்புக்குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களின் (அரச ஊழியர்கள் உட்பட)

(6ம் பக்கம் பார்க்க)

## சேவிஸ் நிலையத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் உள்ள சேவிஸ் நிலையம் ஒன்றிலிருந்து என்ஜின் ஒயில் உட்பட சுமார் 20ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

(6-ம் பக்கம் பார்க்க)

## “ஒக்ஸிஜின் காஸ் சிலின்டர்”—— தடை ஒரு வாரத்தில் நீங்கும் இணைப்பதிகாரி உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ‘காஸ் வெல்டிங்’ தொழிலுக்குப் பாவிக்கப்படும் ஒக்ஸிஜின் காஸ் சிலிண்டர்களின்' விநியோகத்துக்கு இருந்துவரும் தடை ஒருவர காலத்துக்குள் நீக்க நடவடிக்கை எடுப்பதாக இணைப்பதிகாரி பிரிகேடியர் வணசிங்கா உறுதி அளித்துள்ளார்.

[6ம் பக்கம் பார்க்க]

## பஸ்சேவை ஸ்தம்பிதம் தபால்சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்களாக பஸ்சேவை ஸ்தம்பித்துள்ளதால், தபால் விநியோகம் பாதிப்படைந்துள்ளது.

பஸ்கள் மூலம் யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படும், தபால் பைகள் யாழ். தபால் கந்தோரில் தேங்கிக்கிடக்கிறது

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனிலிருந்து எட்டு—— இலங்கைத் தமிழ்குடும்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டன

[லண்டன்]

பிரிட்டனிலிருந்து சுமார் எட்டு இலங்கைத் தமிழ் குடும்பங்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் அகதிகள் அந்தஸ்தில் பிரிட்டன் சென்ற இலங்கைத் தமிழர்களில் இவர்கள் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[6-ம் பக்கம் பார்க்க]

## செட்டிக்குளம் பகுதியில் அச்சத்தினால் மக்கள் வெளியேறுகின்றனர்

(வவனியா)

செட்டிக்குளம் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறிக் கொண்டு வருகின்றார்கள். இங்கு 27ஆயிரம் மக்கள் உள்ளனர். அண்மையில் பகிரங்க ஒலிபெருக்கி மூலம் இப்பகுதி மக்களை வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பின்பு இவ்விடயத்தினை அரசுமறுத்திருந்தது ஆனாலும் செட்டிக்குளம் வீதியால் மன்னாருக்கு செல்லுவோரின் அச்சுறுத்தல் காரணமாக செட்டிக்குளம் பிரதேசத்திலிருந்து பெரும்பாலான மக்கள் வெளியேறிக்கொண்டு வருகின்றனர் இதனை அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

செட்டிக்குளம் பகுதியில் பூர்வீக குடிகளான பல தமிழ்க்

6-ம் பக்கம் பார்க்க)

## ஊழியர்கள் உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்

(6ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

9 சிறீ Volkswagen 1300 கார் நல்ல பாவனையிலுள்ளது விற்பனைக்குண்டு. தொடர்பு;- Dr. சிங்கராசா, 39, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம்.
3476

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் (பழைய C T. B. டிப்போவுக்கு அருகாமையில்) 6 பரப்புக் காணி, வீடும், நல்ல தண்ணீர் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு:- பொ சிவபாலன், சட்டத்தரணி, சித்தன்கேணி
3446

Ford Prefect E N. 8961 கார் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- என். பார்த்திபன், 572, கலட்டி அம்மன் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
3483

அப்பளம், தோசை, தயாரிப்பதற்கேற்ற உழுந்து மா (OridFlour) கிலோ ரூபா 20/-க்கு பெற்றுக் கொள்ளலாம் M. G. M Stores 777, காங்கேசன்துறை வீதி, and 208, முதலாம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611 (2820)

தட்டாதெரு சந்தியில் இருந்து 300 யார் தூரத்தில் சகல வசதியும் உள்ள புதிய வீடு விற்பனைக்கு, நியூதானந்த பவான் தேனீர்க்கடை, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
3500

## தேவை

வில்வம்பழம் தேவை. தொடர்பு கொள்ளவும் மில்க் வைற் யாழ்ப்பாணம்.
3497

யாழ்ப்பாணம் ரோயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் தேவை. நேரில் வரவும்.
3457

## வாடகைக்கு

ஒரு அறையும், குசினியும் வாடகைக்கு உண்டு. குடும்பஸ்தர் அல்லது வேலை பார்க்கும் Ladies விரும்பத்தக்கது தொடர்பு- இல. 12. A. 5ம் குறுக்குரோட், யாழ்ப்பாணம்.
3498

## வகுப்பு

I. C M. A. செக்ஷன் A நவம்பர் 1985 பரீட்சைகுரிய போதனை வகுப்புகள் ஆரம்பம் 1-6-1985 சனி, ஞாயிறு, போயா தினங்கள் முற்பகலில் மட்டும் வகுப்புக்கள், தனிப்பட்ட கவனம். வன்னியசிங்கம் M. Sc (Econ) (Lond) B. Com (Lond) வைரவர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி, A. ரு A காரியாலயத்திற்கருகே.
3503

---

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

நடராசாவும் சபாநாதனும் மனுதாரின் சட்டத்தரணிகள்

### முதல் நிலையிலேயே வழங்கப்பட்ட பூரண கட்டளை

### அறிவித்தல்

சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னையா தியாகராசா என்பவரது மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர் தியாகராசா கைம்பெண் ஞானம்பிகை பருளாய் வீதி, சுழிபுரம்.

மனுதாரர்

இல: மரணசாதனம்/226

இந்த விண்ணப்பத்தில் மேலே கூறப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை நிரூபிப்பதற்காக இம் மன்றில் அவரின் மரண சாதனம் தாக்கல் செய்யப்பட்டு முதல் நிலையிலேயே மன்றினால் பூரணகட்டளை இடப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1985-ம் ஆண்டு பங்குனி மாதம் 20-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

சு. வேலாயுதம்

பதிவாளர்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

3493

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மாதகல் வில்வளை கந்தையா இராமுப்பிள்ளையின் மரணச் சொத்துக்கள் விடயமாக.

இறந்தவர் இராமுப்பிள்ளை கைம்பெண் சுபத்திரை, வில்வளை, மாதகல்.

மனுதார்.

இல: T. 218

1. இராமுப்பிள்ளை சிவசுப்பிரமணியம், அராலி தெற்கு, அராலி
2. இராமுப்பிள்ளை மகள் நளாயினி, வில்வளை. மாதகல்.

எதிர் மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984 ம் ஆண்டு மார்கழி மாதம் 12 ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்.

பதிவாளர்

தயாரிப்பு:

எம்.கே. சுப்பிரமணியம்

மனுதார் தரணி

காரணம்காட்டும் திகதி. 5-6-85 க்கு நீடிக்கப்பட்டது.

சி. இரத்தினம்

பதில் பதிவாளர்

23- 5- 85

3474

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

---

# Niru Tuition Centre
## Station Road, Kondavil.

### A/L 85-ம் ஆண்டிற்கு

துரித மீட்டல் வகுப்பு பகல் நேரம்
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8-30—10-30
PURE — சிக்கல் எண்
APP — நீர் நிலையியல்

### A/L 86

PURE — நுண் கணிதம்
APP — சார்பு வேகம்.
ஆரம்பம்: 01-06-1985
SAT. — 2-00 — 4-00
SUN. — 2-00 — 4-00

### 1987-ம் ஆண்டிற்கு

ஆரம்பம்: 06-06-1985
திரிகோண கணிதம் (வியாழன் 5-00 மணி)
ஆசிரியர்:
Mr. A. பத்மநாதன்

3491

---

## 16-ம் நினைவஞ்சலி



மலர்வு:
10-1-1938

உதிர்வு:
14-5-1985

### திதி: 29-5-85

### சிவசுந்தரம் ஜெகதீசன் (செட்டியார்)

அச்சுவேலி தெற்கு அருணாசலம் செட்டியார் வீதியில் வசித்த அன்னாரின் சபிண்டிக் கிரியைகள் 29-5-85 (புதன்கிழமை) காலை 7 மணி தொடக்கம் பகல் 12மணி மணிவரை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணத்தில் உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் எல்லோரையும் தவறாது சமூகந்தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் சகோதரர்
சி. ஸ்ரீபராபரன்

அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி.

3501

---

## 31-ம் நாள் இதய அஞ்சலி

வஸ்தியாம்பிள்ளை சின்னப்பு

இராசநாயகம்



தோற்றம்:
1907-09-29

மறைவு:
1985-04-29

எங்களின் உயிராக குயிராய்
இதயத்துள் கோயில் கொண்ட
எந்தையே எமக்கு நீரே
எல்லாமாய் இருந்தீர் இன்று
எங்களைப் பிரிந்து ஒரு
திங்கள் சென்றதையா
உங்களின் நினைவு எங்கள்
உள்ளத்தை அகலாதையா.

செந்தமிழ்ப் பண்பாடெல்லாம்
சிந்தையில் செயலில் நாவில்
எந்தநாளும் நீர் பூண்டீர்
இறையருள் வேண்டி நின்றீர்.

அன்னை வேளாங் கன்னியிடம்
அன்பு கொண்டு செல்கையிலே
உம்மை அவளின் திருவடியில்
ஒப்புக் கொடுத்தீர் உயர்வுற்றீர்.

மக்கள், மருமக்கள். சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

(3479) ஜெயபதி, பத்தாவத்தை, இளவாலை.

---


# HOME FINANCE LTD
## ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக


சித்தை – பப்ளின் – பிசாமா

போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவு செய்யவும்.

NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA


---

## 1-ம் வருட நினைவஞ்சலி
### M. R. மணிவண்ணன்



மலர்வு:
1962-03-11

உதிர்வு:
1984-05-29

ஓராண்டு மறைந்தது கண்மணியே உந்தன்
ஒளிமுகத்தைக் காணாது நெஞ்சம் விம்மி
நீராண்ட கண்களுடன் நினைவிழந்தே
நெக்குருகி நடைப்பிணம் போல் வாழுகின்றோம்.
பாராண்டு நீ வாழ்வாய் என்றே நம்பிப்
பார்த்திருந்தோம் மணிவண்ணா! பறந்தாய் எங்கே?
ஊராண்டமகனே! எம் உடன் பிறப்பே
உயர்வான வீட்டினிலே உனை நாம் காண்போம்.
இறைவனில் சங்கமமாகி ஓராண்டு பூர்த்தியாகும்
இந்நாளில் அமைதியும், ஒளியும் நிறைந்த அமர வாழ்வடைய வேண்டுகின்றோம்.

அன்புடன் நினைவுகூரும்
தாய், சகோதரன், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

3400

### மணிவாக்கு

வல்லவன் பம்பரம் மண்ணிலும் ஆடும்.
— பழமொழி

## நமது நோக்கு

### 'இப்சி டிக்ஸிற்'

இரு பெருந்தலைவர்கள் முடித்திருக்கும் இரு பெரும் பயணங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை.

அமெரிக்க ஜனாதிபதி அண்மையில் மேற்கொண்ட ஐரோப்பிய பயணத்தின் நோக்கம் எள்ளளவும் முன்னேற்றம் காணவில்லை.

எங்கும் எதிர்ப்பும் கண்டனக் கோஷமும் மலிந்திருந்தன. மேற்குஜெர்மனியில், ஐரோப்பிய பாராளுமன்றத்தில், ஸ்பெயினில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க ஆர்ப்பாட்டமும் செய்தனர்.

வீடு திரும்பிய ரீகனுக்கு நிலபாவாடை கிடைக்கவில்லை. ஜெர்மனியில் யூதரை அழித்த ஹிட்லரின் கொடிய படைக்கு அவர்களின் சமாதியில் அஞ்சலி செலுத்தியது யூதர்களுக்கு ஆத்திரமும் ஜெர்மனியருக்கு கவலையும் அளித்தது. இச்செயலை அமெரிக்கமக்கள் தாமும் சற்றும் ரசிக்கவில்லை.

ரீகனின் ஐரோப்பிய பயணம் ஜெர்மனியையும் மற்றைய ஐரோப்பிய வல்லரசுகளையும் ஒன்றுபடுத்தி தம்முடைய வான்மண்டல போருக்கு ஆதரவு திரட்டி, நேற்றோவுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கம் கொண்டது. ஹிட்லரின் கொடுமையை மறக்க முயன்ற இளம் ஜெர்மனியருக்கு அவருடைய சமாதி, அஞ்சலி கொடுமைக்குப் பெருமை அளிக்கும் வைபவம் போலிருந்தது. அமெரிக்க காங்கிரஸ், அமெரிக்க பொதுமக்கள் இந்தப் பயணத்தை ஒரு தோல்வியெனக் கணித்திருக்கின்றனர்.

இது இவ்வாறாக ஆசியாவின் பெருந்தலைவர் இந்தியப் பிரதமர் ரஜீவ் மாஸ்கோ சென்று திரும்பிய பயணம் பெருவெற்றியில் முடிந்திருப்பதை நாம் காண முடிகிறது.

பிரசாரத்தைப் பிட்டு உள்ளுடனை ஆராய முடியுமானால் பாரதத்துக்கு ரஷ்யா பேருதவி வழங்க முன்வந்தது மட்டுமல்ல இந்திய தேசத்துக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது பாதுகாக்கும் பொறுப்பு ரஷ்யாவுக்கு உண்டென்பது வெளிப்படை.

வெளிநாட்டு விவகாரங்களில் இந்தியாவுக்கு இன்றைய தலைவலி பாகிஸ்தானின் அணுஆயுத அமளி. இந்த அமளி மிக ரகசியமாக நடைபெறுவதை ரஜீவ் மாஸ்கோவில் உலகறிய பிரஸ்தாபித்திருக்கிறார் அமெரிக்கா அதனைத் தெரிந்தும் தெரியாதது போல நடப்பதையும் வலுவாகக் கண்டித்திருக்கிறார்.

இந்த நிலையில் ரஷ்யத் தலைவர் கோர்பச்சோவ் தம்முடைய (pocket) பாக்கெட்டில் ரஜீவை சுருட்டிப் போட்டிருக்கலாம். அவர் அவ்வாறு செய்யவில்லை. ரஷ்யா இந்தச் சூழ்ச்சியை அம்பலப்படுத்தி அமெரிக்காவின் திட்டத்தை முறியடிக்க ஆலோசனை வழங்கி அதற்கு ஆவனசெய்ய முன்வந்திருக்கிறது; இதுவே மார்க்ஸிய ராஜதந்திரம்.

அடுத்த மாதம் அமெரிக்கா செல்லவிருக்கும் இந்தியப் பிரதமர் ரஷ்யாவின் உற்ற நண்பனாகவே அங்கு செல்கின்றார். இது அமெரிக்காவுக்கு எவ்வித துவேஷமும் ஏற்படுத்த வேண்டியதில்லை எனவே ஜனாதிபதி ரீகனும் அவருடைய உயர்மட்ட சகாக்களும் அமெரிக்க தொழில்நுட்ப வளர்ச்சியில் மோகம் கொண்ட ரஜீவை எவ்வாறு கைக்குள் போடலாமென்பது இலகுவானதல்ல.

ரஷ்யாவின் அசைவற்ற நட்புக்கு எவ்வித பங்கமும் விளைக்காதவாறு அதேசமயம் அமெரிக்காவின் உதவியும் ஒத்தாசையும் தேவை என்பதை நடுநிலைமையில் விளக்கவல்லவர் ரஜீவ். வெற்றியும் காணவல்ல சாத்தியக்கூறு உண்டு.

அணிசேரா இயக்கத்தின் தலைவர் இலங்கைவிடயத்தில் ''தமிழ்ப் பயங்கரவாதத்துக்கு தமது நாட்டில் தளம் அமைக்கவிட்டதேனம்?'' என்று எந்த அமெரிக்கரும் இந்த விஜயத்தில் கேட்கப்போவதில்லை. அதனைச் சமாளிக்க அமெரிக்காவே ஆலோசனை வழங்க முன்வரும்.

எனவே அணிசேரா இயக்கத்தை பரிகாசம் செய்யும் ரீகன் ரஜீவுடன் கலந்துரையாடும்போது அதற்குப் போதிய மதிப்பு அளிக்கும் வகையில் நடிப்பார். பாகிஸ்தான் விடயம் நிச்சயம் பேசப்படும். எங்களைப் பொறுத்தளவில் சின்ன இலங்கையும் அதில் 'பெரிய' இடம்பெறும். சுமுகமான சமாதானமான முடிவுக்கு வழிபிறக்கும்.

ஒரு உலகப்போர் தமிழர் பிரச்னையால் உருவாகுமென்பதை அமெரிக்காவின் உலக அரசியல் ராஜதந்திரம் கனவிலும் கண்டிராது. ஆனால் இந்துசமுத்திர அமைதி பேச்சில் பெருமிடம்பெறும்; பல பிரச்னைகளுக்கு சாவி அங்குதான் உண்டு.

இன்று இந்துசமுத்திரம் அமைதிப் பிரதேசமாக வேண்டுமென்று இந்தியாவும் சமுத்திரத்தின்கரையோர நாடுகளும் கங்கணம் கட்டுகின்றன. வல்லரசு ரஷ்யா அதற்கு முழுஆதரவு வழங்குகின்றது. அமெரிக்கா அதனைத்தட்டிக்கழிக்கின்றது.

இங்குதான் எங்கள் இலங்கையின் திருகுதாளம்அம்பலமாகும்; இந்த ஆலோசனையைக்கிளப்பிய இலங்கை இன்று அமெரிக்கா சாரபில் இதனைச்சறுக்க விடுகிறது கண்கூடு ஆனால் நிலைமை மாறவேண்டியிருக்கிறது.

அவுஸ்திரேலியா, நியூசிலண்ட் போன்ற நாடுகள் அமெரிக்க பிடியிலிருந்து விலகி, இந்துசமுத்திரம் பாதுகாப்பாக வேண்டுமென ஒரு புதிய போக்கைக் கடைப்பிடித் திருக்கின்றன. இதற்கு போதிய நியாயம் உண்டு.

இந்த பின்னணியில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை, அயல் நாடுகள் நட்பு நாடுகளாக, இரகசிய எதிர்ப்புக்கும்இடமளிக்காதவாறு தூய்மையான பலம் வாய்ந்த கொள்கையாக உறுதிபெறுமென நம்ப இடமுண்டு.

இலங்கையைப் பொறுத்தளவில் இனிமேல் முரண்பட்டபல பேச்சுப் பயணங்களுக்கு இடமிராது. வருவதும் போவதுமான சுற்றுலாக்கள் முடிவடையும். புதிய இந்தியத்தூதர் டிக்ஸிற் என்ற நாமமுடையவர். பெயரிலேயே நாம் குறிப்பிட்ட கருத்து புலப்படுகிறது. இது எமக்கொரு புதுமையான பெயர். இதற்கொரு விளக்கம் உண்டு

தமிழுக்குச் சமஸ்கிருதம் தெய்வ பாஷையாக விருப்பதை தனித்தமிழ் கூட்டத்தினர் மறுத்தாலும் அது உண்மையே. அதேபோல் ஆங்கிலத்துக்கு லத்தீன் அவ்வாறு இருந்தது இன்னும் அந்தநிலை முற்றாக அற்றுப்போகவில்லை.

இப்சி டிக்ஸிற் [IPSE DIXIT] என்பது ஆங்கிலத்தில் இடம்பெற்ற பிரபல லத்தீன்வாசகம் கருத்து; 'எஜமான் சொல்லிவிட்டார்' என்பது 'டிக்ஸிற் என்பது சொன்னார்' என்ற வெறும் இறந்தகாலமல்ல. எஜமான்சொல்லிவிட்டார். அதற்கு மேல் ஒன்றும் சொல்ல இல்லை என்ற கருத்துடையது.

இலங்கையைப் பொறுத்தளவில் தூதுவரின் பெயர் காரணப்பெயராக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வடபகுதியில்————

# சிங்கள மக்கள் குடியேற்றம்: 5 அமைச்சுக்கள் நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதியில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் சிங்கள மக்களை விரைவில் குடியேற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஐந்து அமைச்சுகளின் அதிகாரிகள் விரைவில் ஆரம்பிப்பார்கள்.

பந்தோபஸ்து அமைச்சு, மகாவலி அமைச்சு, விவசாய அமைச்சு, இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சு, பெருந்தெருக்கள் அமைச்சு ஆகிய ஐந்து அமைச்சுக்களையும் சேர்ந்த உயர் அதிகாரிகளே மேற்படி பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வார்கள்.

இதற்கிடையே சிங்கள மக்களை விரைவில் குடியேற்றுமாறு பல அமைச்சர்களும், பெரும்பாலான எம்.பி க்களும் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

ஜனாதிபதியின் மதத்தலைவர்கள்

மாநாடும், பீடாதிபதியின்

அரசியல் தலைவர்கள் மாநாடும்

# இனப்பிரச்னைக்கு இனியும் ஒரு தீர்வு கிடைக்குமா?

இலங்கையின் இனப்பிரச்னை சம்பந்தமாக இந்தநாட்டின் ஜனாதிபதி அதிஉத்தமர் ஜே. ஆர். ஜயவர்த்தன சென்ற புதன்கிழமை மதத் தலைவர்களை அழைத்து மாநாடு கூட்டி ஆலோசனை நடத்தினார்.

இதே சமயம் பௌத்த மத அஸ்கிரிய பீடாதிபதி வண. பாலிபானே சந்தானந்த மகா நாயக தேரோ இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்களைக் கொண்ட மாநாடு ஒன்று கூட்டி இனப்பிரச்னை பற்றி ஆலோசனை நடத்தினார் இந்த மாநாட்டுக்கு ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மட்டும் தனது பிரதிநிதி எவரையும் அனுப்பவில்லை.

அதிஉத்தம ஜனாதிபதி கூட்டிய மதத் தலைவர்கள் மாநாட்டில் அநுராதபுரம் வரைவந்துவிட்ட பயங்கரவாதத்தைப் பற்றி ஜனாதிபதி எடுத்துக்கூறி இனப்பிரச்னையை விட பயங்கரவாதிகள் மார்க்ஸீய அடிப்படையில் செயல்படுகிறார்களென்றும் அவர்கள் ஜனநாயக ரீதியில் அமைந்த இந்த அரசைக் கவிழ்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் பயங்கரவாதத்தையும் வன்செயல்களையும் முறியடிப்பதற்கு சகலரும் ஐக்கியப்படவேண்டிய அவசியம் இன்றுபோல் என்றுமிருந்ததில்லையென்றும் வலியுறுத்தியதுடன் மதத்தலைவர்கள் அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

### போர் ஓய்வு உடன் தேவை

அஸ்கிரிய பீடாதிபதி வண. பாலிபானே சந்தானந்த மகா நாயக தேரோ கூட்டிய அரசியல் கட்சித் தலைவர்களின் மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகா, லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, மக்கள் ஐக்கியமுன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன, ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் திரு. ரி. பி. இலங்கரத்தின, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. கே. பி. சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிக்குமாறு அரசை வலியுறுத்துமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### அநுராதபுர சம்பவத்தின்பின்

இனப்பிரச்னைக்கு நிரந்தரமான, நியாயமான, சுமுகமான தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ஜே. ஆர். பெரும் ஆரவாரத்துடன் கூட்டிய சர்வகட்சி மாநாடு பின்னர் வட்டமேசை மாநாடாக மாறியபொழுது அரசியல் கட்சித் தலைவர்களும், அஸ்கிரிய பீடாதிபதியும் அதில் கலந்துகொண்டனர். மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட சில யோசனைகளை மாநாட்டில் கலந்துகொள்ளாத ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவருடன் கலந்து யோசனை செய்தபின் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று அறிவித்தவரும் அஸ்கிரிய பீடாதிபதி தான்!

அநுராதபுரத்தில் நடந்த கொடிய சம்பவத்தின்பின் இனப்பிரச்னைக்கு ஒரு விரிவான முடிவுகாண வேண்டுமென்ற அவசியத்தை பலதரப்பட்ட வட்டாரங்களிலும் ஏற்படுத்தியிருக்கிறது.

அநுராதபுரத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தக்கறை படிந்த ஆடைகள், உடைமைகளையும் சேதமடைந்த வாகனங்களையும் தொலைக்காட்சியில் காட்டியவர்கள் அநுராதபுரத்தில் அரச கடமையிலீடுபட்டிருந்து குண்டர்களால் கோரமாகக் கொலை செய்யப்பட்ட தமிழர்களையோ அவர்களின் சேதப்படுத்தப்பட்ட உடைமைகளையோ காட்ட முன் வராதது ஆச்சரியமல்ல. குறிகாட்டுவான் துறைக்குச் சமீபத்தில் நடுக்கடலில் குண்டர் படையால் பச்சிளம் பாலகர்களும், பெண்களும் உட்பட முப்பத்தைந்துபேர் கோரமாகக் கொலைசெய்யப்

(6ம் பக்கம் பார்க்க)

### எஸ். எம். ஜி.

இந்த மாநாட்டில் அஸ்கிரிய பீடாதிபதி மகா நாயக சந்தானந்த தேரோ இரண்டு முக்கிய யோசனைகளை முன்வைத்தார்.

(1) மகா நாயக்கர்களையும் மற்றும் மதத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் கொண்ட பாதுகாப்பு ஆலோசனைச் சபையொன்று நிறுவ வேண்டும். இந்த மாநாடு மீண்டும் அடுத்த மாதம் நான்காம் தேதி கூடும் போது இந்த யோசனை சம்பந்தமாக சகல தரப்பின் கருத்துக்களும் சமர்ப்பிக்கப்படுமாம்.

(2) இந்திய அரசுடனும் தமிழ் நாட்டு அரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி, தீவிரவாதிகள் ஆகியோருடனும் அரசாங்கம் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இருதரப்பிலும் உடனடியாக ''போர் நிறுத்தம்'' மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மகா நாயக தேரோவும் இம்மாநாட்டில் கலந்து கொண்ட அரசியல் கட்சித் தலைவர்களும் வலியுறுத்தினர்.

மீண்டும் சம்பந்தப்பட்ட சகலதரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற யோசனைக்கு இந்த மாநாடு பெரும் ஆதரவு தெரிவித்தது. தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்

## றமழான் சிந்தனை

மனிதர்களின் கைகள் தேடிக்கொண்டதன் காரணமாகக் கடலிலும், தரையிலும் அழிவுகள் பரவிவிட்டன. அவைகளிலிருந்து அவர்கள் விலகிக் கொள்ளும் பொருட்டு அவர்களின் தீவினைகளில் சிலவற்றின் தண்டனையை அவர்கள் [இம்மையிலேயே] ருசிக்கும்படி [இறைவன்] செய்கிறான்.

திருக்குர்ஆன் (30:41)

நோன்பு துறக்கும் நேரம் (மஃரிப்) 6:22
நோன்பு ஆரம்பிக்கும் நேரம்: (ஸஹர்முடிவு) 4 18
ஜனபா ஜெசிமா கௌதி

பங்களாதேஷ் புயல், வெள்ள மரணங்கள்———

# 40 ஆயிரமாக் அதிகரிப்பு

## பல நாடுகள் நிவாரண உதவி!

டாக்கா. மே. 28 பங்களாதேஷில் வீசிய கடும் புயலிஞலும், வெள்ளப் பெருக்கிஞலும் சுமார் 40 ஆயிரம் பேர் மரணித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. இப் பெரும் இயற்கை அழிவையடுத்து பிரிட்டன், ஜெர்மன், இந்தியா உட்படப் பல நாடுகளும், செஞ்சிலுவைச் சங்கம் உட்படப் பல தொண்டர் ஸ்தாபனங்களும் நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன.

பிரிட்டன் 50 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்களை உதவித் தொகையாக வழங்கியுள்ளது. மேற்கு ஜெர்மனி 3 லட்சம் டொச் மார்க்குகளை வழங்கியுள்ளது. ஜெனீவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 17 லட்சம் டாலர்களை வழங்கியுள்ளது.

இந்தியா தன்ஞலான அனைத்து உதவிகளையும் வழங்குவதாக அறிவித்திருப்பதுடன், மருந்து வகைகளையும், வைத்திய நிபுணர்களையும் அவசரமாக பங்களாதேஷிற்கு அனுப்பிவைத்துள்ளது.

சுமார் 60 அடி உயரம்வரை கடல் அலைகள் மேலெழுந்து கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்தன. இதஞல் லட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் அடிபட்டுச் சென்றனர்.

இறந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென்று தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் எர்ஷாத் நிவாரண வேலைகளைக் கவனிக்கும்பொருட்டு ஒரு விசேட குழுவை நியமித்துள்ளார். [கி]

### பலே ஆசாமிகள்

(மட்டுவில்)

சாவகச்சேரி நகர சபையால் மட்டுவில் மகாவித்தியாலயச் சந்தியில் பொது மக்கள் நலன் கருதி அமைக்கப்பட்ட 'மேர்க்கூறி' மின் பல்லையும் அதன் உபமின் இயக்கியையும் இரவோடு இரவாக யாரோ திருடிச் சென்றுள்ளனர்! இதஞல் பிரதான அந்தச் சந்தி இப்பொழுது இருளில் மூழ்கியுள்ளது.

### 20 மாதங்களில் 1120 விண்ணப்பம்

(சுண்டுக்குழி)

யாழ் கடவுச் சீட்டு அலுவலகத்தில் ஏப்பிரல் மாதம் 1ம் திகதி தொடக்கம் மே மாதம் 24-ந் திகதிவரை 1120 கையேற்கப்பட்ட விண்ணப்பங்களும் கொழும்புக்கு ஒவ்வொரு வாரமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ் அலுவலகத்தில் மார்ச் மாதம் கையளிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு கடவுச் சீட்டுக்கள் கொழும்பிலிருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### சேவையிலிருந்து இடைநிறுத்தம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தண்ணீர்விநியோகப் பிரிவில் இயந்திர இயக்குநர்களாகக் (பம் ஒப்பறேற்றேஸ்) கடமையாற்றிவந்த சுமார் 50 ஊழியர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டு ஒய்வூதியத்தில் செல்லும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதாரத்திணைக்களத்திஞல் சேவைக்குசேர்த்துக்கொள்ளப்பட்ட இவர்கள் பின்னர்கட்டிட திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டு இதுவரைகாலமும் கட்டிடத் திணைக்களத்தின்கீழ் கடமையாற்றிவந்தனர் இவர்களுக்கு திடீரெனக் கிடைத்த அறிவித்தலில் கடந்த ஏப்ரல் மாதம் 30ம் திகதியுடன் இவர்களது சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஒய்வூதியத்தில் செல்லுமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### மற்றுமொரு சாராய லொறி கடத்தப்பட்டது!

[யாழ்ப்பாணம்]

தனிப்பட்ட வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சாராயத்துடன் லொறியொன்று இனந்தெரியாதவர்களிஞல் கடத்தப்பட்டுள்ளதாக யாழ். வர்த்தக சங்கத்திற்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்த லொறி இயக்கச்சிக்கும், எழுதுமட்டுவாளுக்குமிடையில் கடத்தப்பட்டுள்ளதாக அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### சிகரெட் லொறியும் கடத்தப்பட்டது!

[யாழ்ப்பாணம்]

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியுள்ள சிகரட் பெட்டிகளுடன் லொறிஒன்று இனந்தெரியாதவர்களால், கடத்தப்பட்டுள்ளதாக யாழ் வர்த்தக சங்கத்திற்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாளுக்கும், இயக்கச்சிக்குமிடையில் இந்த லொறி கடத்தப்பட்டதாகவும் அப்புகாரில் கூறப்பட்டுள்ளது.

இச் சிகரெட்டுக்கள் தனிப்பட்ட வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானதாம். (க)

### இன்று நினைவுச் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவு இன்று புதன்கிழமை நண்பகல் யாழ். பல்கலைக்கழகம் கைலாசபதி கலையரங்கில் நடைபெறுகிறது.

கலைப் பீடாதிபதி திரு. என் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை 'வடக்குக் கிழக்குப் பிரதேசக் குடித் தொகைப் பெயர்வு' என்னும் பொருள் பற்றி நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

விலங்கியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி க. சிற்றம்பலம் ஆகியோர் நினைவுரை யாற்றுவார்கள்.

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுக் குழு நடத்திடம் இரண்டாவது சொற்பொழிவு நிகழ்ச்சி இதுவாகும்.

இதற்கான ஏற்பாடுகளை இக்குழுவின் செயலாளரும், புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு எஸ் பாலச்சந்திரன் மேற்கொண்டார்.

### வீடுகள் வழங்கியதில் சிகை அலங்கரிப்பாளர் சங்கம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

குருநகர் தொடர்மாடி வீடுகள் வீடற்றவர்களுக்குக் கையளிக்கப்பட்டிருக்கும் விடயத்தில் பாகுபாடு காட்டப்பட்டிருப்பதாக வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

குருநகரில் சுமார் 25 சிகை அலங்கரிப்பாளர்கள் சமூகக் குடும்பங்கள் இருக்கின்றபோதிலும் இவற்றுக்கு நியாயமான முறையில் அத்தொடர்மாடி வீடுகள் வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

காணி வாங்கவோ, வீடு கட்டவோ வசதியற்றுள்ள இவர்களில் ஆறு குடும்பத்தினர் குருநகர் தொடர்மாடி வீடுகளுக்கு விண்ணப்பித்திருந்தனராம் ஆஞல் ஒரு குடும்பத்திற்கு மட்டுமே வீடு தரப்பட்டுள்ளதெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### மயிலிட்டி மீனவர் இருவரைக் காணவில்லை

(மாவிட்டபுரம்)

கடலில் மீன்பிடிக்கச் சென்ற இரு மயிலிட்டி மீனவர்கள் திரும்பி வரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 19ம்திகதி மயிலிட்டியைச் சேர்ந்த இ. வேலும் மயிலும் என்பருடைய 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வள்ளத்தில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற பி என். ஜயசேஞ, எஸ். இராமராஜ் ஆகிய இருவருமே திரும்பி வரவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் வள்ளமோ இந்த மீனவர்களோ எதுவும் அகப்படவில்லையென தெரிவிக்கப்பட்டது. (கி)

### மின்சாரம் தாக்கி உப-தபால் அதிபர் பலி!

[மட்டுவில்]

மின்சாரம் தாக்கியதால் ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையான உப-தபால் நிலைய அதிபர் ஒருவர் ஸ்தலத்திலே மரணமாஞர். இச் சம்பவம் மட்டுவில் வடக்கில் நடைபெற்றுள்ளது.

மட்டுவில் வடக்கு கனகன் புளியடி சந்தி உப தபால்நிலைய அதிபரான குமாரசாமி மகாதேவா [45 வயது] என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே மின்சாரம்தாக்கி மரணமானவராவார்,

மரண விசாரணையை சாவகச்சேரிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் நடத்திஞர். மட்டுவில் வடக்கு கிராம சேவையாளர் கே. கதிர்காமநாதன் சாட்சிகளை ஆஜர் செய்தார். விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.


### வவுனியா நகரசபை கேள்வி அறிவித்தல்

01 - 06 - 1985 முதல் 31 - 12 - 1985 வரை கீழ்வரும் கடையை குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இணைப்பிரதிகளில் 28 - 05 - 85-ம் திகதி முற்பகல் 10 - 00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| | 1985-ல் ஏற்றுக் கொண்ட தொகை (7 மாதம்) | கேள்விவைப்பு பணம் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. நவீனசந்தையருகில் உள்ள மாட்டிறைச்சிக் கடை இல. 2. | 20186-80 | 1000-00 | 100-00 |

மேற்படி கேள்வி வைப்புப் பணமும் கேள்விப்படிவக் கட்டணமும் செலுத்தப் படுவதன் பேரில் 27 - 05 - 85 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபின்பே கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

கேள்வி வைப்புப் பணமும் படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வவுனியா நகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வ. இரத்தினசிங்கம்.
செயலாளர்,
நகரசபை வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா. 13 - 05 - 85

3496



மாணவர் — அரச ஊழியருக்கு

## காங்கேசன் ரவல்ஸ்

வழங்கும்

### தினசரி பஸ் சேவை!

769 பாதை வழியாக 3-6-85 முதல்
காங்கேசன்துறை — கச்சேரி
(சுண்டுக்குளி ஊடாக)
நடைபெறவுள்ளது.

★ நேர அட்டவணை

| காங்கேசன்துறையில் புறப்படும் நேரம் | | கச்சேரியில் புறப்படும் நேரம் |
|---|---|---|
| 06 50 | ——> | 07-40 |
| 08 30 | <—— | 07 45 (கடுகதி) |
| 12-30 | ——> | 13-30 |
| 14-40 | <—— | 13 40 (சுண்டுக்குளி) |
| 15 00 | ——> | 16-00 |
| 17-00 | ——> | 16-05 |

பருவகாலச் சீட்டுக்களை 1-ம், 2-ம் திகதிகளில் காரியாலய நேரங்களில் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

காங்கேசன்துறை-கொழும்பு பஸ் சேவையும் நடைபெறுகிறது

காங்கேசன் ரவல்ஸ்
பிரதான வீதி,
காங்கேசன்துறை.

3485

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
சலங்கை ஒலி
கடைசிவாரம்

யாழ். வின்ஸர் மினி
தினசரி 10-30, 2-3
ரஜனிகாந் - சிரஞ்சீவி
ஸ்ரீதேவி - தேங்காய்சீனிவாசன்
நடித்த
இராணுவ வீரன்
வறுவிறுப்பானசண்டைக்
காட்சிகள் நிறைந்தஓவியம்

ஆனந்தி
வீடியோ சினிமா
(மனோகராவில்)
தினசரி 10-30, 2-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
அசோகன்-கே.ஆர்.விஜயா
நடித்த
தேவர் பிலிம்
கன்னித்தாய்
(புதிய பிரதி)

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
10-30 2-00
மோகன்—ரேவதி
உதயகீதம்
4-30 p. m.
ALLICE GOOD BODY
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
வி தி
(கலர்)

மொடேர்ண்
மினி சினிமா
ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு அருகாமை
CRUEL PASSION
வயது வந்தவர்களுக்கு மட்டும்
தினசரி 3 காட்சிகள்

லதா மினி
(கோண்டாவில்)
சிவாஜி - பிரபு
'நாம்மிருவர்'
(தந்தையும் மகனும் புகழ் ஏணியில் போட்டி)
10-30 காலை மாலை 3-00

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம் வாசல் இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(அழ். நகர்)
10-30, 2-30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

## தொலைக்காட்சி

மாலை
5-00 செய்திகள்
5-05 'ஜஸ் ஹாக்கி'- ஒலிம்பிக் விளையாட்டு
5-20 'பொலோமீ' -ஆங்கில மொழிப்பாடம்
5-35 'ஸ்பைடர் மேன்' [கார்ட்டூன் சித்திரம்]
6-00 தகவல் நிகழ்ச்சி [ஆங்கிலம்]
6-15 பௌத்த நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
6-55 'கலைஅரங்கம்'
7-25 சிங்கள நாடகம்
8-00 செய்திகள் [சிங்களம்]
8-25 'டிபரன்ற் ஸ்டிரோக்ஸ்' நகைச்சுவைச் சித்திரம் [ஆங்கிலம்]
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-25 தொலைக்காட்சிச் சித்திரம் [ஆங்கிலம்]
10-40 நிகழ்ச்சிகள் முடிவு.

## அசம்பாவிதம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புறப்பட்ட மூன்று லொறிகள் வழியில் அசம்பாவிதத்திற்கு உள்ளானதாக தெரியவந்துள்ளது.

இம்மூன்று லொறிகளும், அநுரதபுரத்திற்கு சமீபத்தில் வந்து கொண்டிருந்தபோதே அசம்பாவிதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. (க)

SLT மினிசினிமா
எம் ஜி ஆர். சரோஜாதேவி
ரங்காராவ்- கண்ணாம்பா
நீதிக்குப்பின் பாசம்

ஸ்ரான்லி மினி
10-30
ஆனந்தபாபு ஜீவிதா
பாடும் வானம்பாடி
2 30
ஆனந்தபாபு கார்த்திக்
விசு, அனுராதா
புயல்கடந்த பூமி
திரைப்படங்கள் மூலப் பிரதி களிலிருந்து பிரதி பண்ணிக்கொடுக்கப்படும்.

## தேர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை கர்ணன் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணியம் கோவில் வருடாந்த தேர் உற்சவம் எதிர்வரும் 1ம் திகதியும், தீர்த்தோற்சவம் 2ம் திகதியும் நடைபெறும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசைக்கலைமணி / நாட்டியக் கலைமணிப் பயிற்சிநெறியினைப் பயிலுவதற்கான அனுமதி—1985

மேற்குறித்த கல்வி நெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 1985 யூன் 20-ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்களும் மேலதிக விபரங்களும் 23X10 செ. மீ. அளவினதான உங்கள் முகவரி கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையைச் சிரேட்ட உதவிப்பதிவாளர், தேர்வுகள் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
10-05-1985 3495

## கந்தரோடை
## திரு. மா. சுப்பிரமணியம் குடும்பத்தினர் நன்றி கூறுகின்றனர்



27-05-85ல் அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவி நாகம்மாளின் இறுதிக் கிரியைகளிலும், 31-ம் நாள் ஒன்று கூடலிலும் பங்குகொண்டு சகல வழிகளிலும் உதவிகள் நல்கியோருக்கு நன்றி.

3505

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் பிரதான வீதிகள் தவிர்ந்த சிறுதெருக்கள், ஒழுங்கைகளில் வியாபாரஞ் செய்பவர்கள் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்ய தமது விருப்பத்தை நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
ஈழநாடு லிமிட்.

3508

## முக்கிய அறிவித்தல்
### எனது அன்பார்ந்த வாடிக்கையாளர்க்கு

அருணாசலம் சண்முகம் மகாதேவா ஆகிய நான் எனது இல: 65, பெரிய தெரு என்ற விலாசத்திலுள்ள அடைவுகடையை 85-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ம் திகதியுடன் மூடி விடுவதற்குத் தீர்மானித்துள்ளேன். ஆகையால் தயவு செய்து உங்கள் சிரமத்தைப் பாராது ஆனி மாதம் 25-ம் திகதிக்கு முன்னராக உங்கள் சகல அடைவு நகைகளையும் மீட்டு எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு மிகப்பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அ. ச. மகாதேவா.
3346

## வரவேற்பு உபசார அன்பழைப்பு

செல்வன் க. குலசிங்கம் செல்வி சி. தயாராணி
(பருத்தித்துறை) (கட்டுடை)

இவர்களின் திருமணத்தை கௌரவிக்கும்முகமாக 01-06-85 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணி முதல் 7-00 மணி வரையும் கட்டுடையிலுள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வரவேற்புபசார வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

கட்டுடை, திருமதி ப. சிறீதரன்
மானிப்பாய். [3482]

## இங்கிலாந்து, பேர்லின்
### மற்றும் நாடுகளுக்கு பயணம் செய்ய வேண்டுமா

1. யாழ்ப்பாணத்திலிருந்து BERLIN வரை எங்கள் பிரதிநிதி ஒருவர் கூட்டிச்செல்வார்.
2. பிரயாணத்துக்கான ஆலோசனைகளும், பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

S. வரன்,
நீர்குவில்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

S. நேசன்
127, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். மரியா ஹோட்டலுக்கு அருகாமையிலுள்ளது.)

COLOMBO to BERLIN } ஒரு வழி 14,000/-

3490

## உபநயன அழைப்பு
[பூனூல் கல்யாணம்]

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் வைகாசி மாதம் 18-ந் திகதி (31-05-1985) வெள்ளிக்கிழமை காலை 09 மணி 04 நிமிஷத்திற்கு மேல் 10 மணி 16 நிமிஷத்திற்குள் வரும் சுடக லக்கின சுப முகூர்த்தத்தில்;

எங்களது ஏக புத்திரன்
திருவளர் செல்வன்
**மயூரரதன்**
அவர்கட்கு

பிரம்மோபதேச உபநயனஞ் செய்யத் திருவருள் கூட்டியிருப்பதனால், அக்கருமம் காண்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராய்ச் சமுகந்தந்து மைந்தனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
கல்வளை. வி. விவேகானந்த சர்மா
(இலங்கை வங்கி, மாவட்ட காரியாலயம், யாழ்ப்பாணம்).
வி. சரஸ்வதி (சரோஜா)

"மயூரகம்",
குருக்கள் கிணற்றடி,
கணேஸ்வரம்,
அளவெட்டி. (3492)

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கீழ்வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 8-06-1985 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூ. 250/- செலுத்துதல் வேண்டும். வைப்புப் பணம் இடாதோரின் கேள்விப் பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது இதற்கான வைப்புப்பணத்தையும், விண்ணப்பப் படிவத்திற்கான ரூபா 5/- ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ இன்றேல் தபால் காசுக் கட்டளை மூலமாகவோ அனுப்பி வைத்தால் கேள்வி விண்ணப்பப் பத்திரம் உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

வெற்றுச் சாக்கு விபரம்

| | | |
|---|---|---|
| 1. | பிறிமா சாக்கு | 873 |
| 2. | அரிசி 2½ புசல் | 975 |
| 3. | நவகானியம் | 103 |
| 4. | அரிசி 1 அந்தர் (சாக்கு) | 144 |
| 5. | சீனி சாக்கு | 493 |
| 6. | நஇழச்சம் | 475 |
| 7. | சர்க்கரை | 55 |
| 8. | கற்கண்டு | 28 |
| 9. | உரப்பை | 170 |
| | மொத்தம். | 3296 |

பொது முகாமையாளர்.

1985 - 05 - 25. 3487

# கிளிநொச்சி பிரஜைகள் குழு பிரிகேடியருடன் சந்திப்பு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சியில் ஆயுதப் படையினர் கால்நடை ரோந்து வருவதும் அப்போது மேற் கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகமும் நிறுத்தப்பட வேண்டும் என கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினர் இரா ணுவ இணைப்பதிகாரி பிரி கேடியர் திலகரத்தினவைச் சந்தித்து வலியுறுத்தினர்கள்.

ஆனையிறவு இராணுவமுகா மில் இச்சந்திப்பு நடைபெற் றது. பிரஜைகள் குழு உபதலை வர் டாக்டர் கே. சுப்பையா, பொருளாளர் ப. வை. ஜெய பாலன் உட்பட ஏழுபேர் கொண்ட பிரஜைகள் குழு வினர் இணைப்பதிகாரி திரு திலகரத்தினவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர் கள்.

முறிகண்டி துப்பாக்கிப் பிர யோகத்தில் ஒருவர் கொலை யுண்டு இவர் காயமடைந்த சம்பவம் தொடர்பாகவும் முறையிட்ட பிரஜைகள் குழு வினர் 154ம் கட்டைக்கும் பரந்தனிற்கு மிடைப்பட்ட பகுதியில் இடம்பெற்ற துப் பாக்கிப் பிரயோகத்தை அடுத்து இடம்பெற்ற கொலைச் சம்பவம், 23 வீடுகள் எரிக்கப் பட்டமை, 2 கடைகள், மூன்று வாகனங்கள் எரிக்கப் பட்டமை தொடர்பாகவும் புகார் தெரிவித்தனர்.

வீதியில் செல்வோரிடம் அடையாளஅட்டை பறிக்கப் படுதல், வேலைவாங்குதல், மற்றும் எரிபொருள் வினியோ கம் தொடர்பாகவும் பிரஜை கள் குழு தூதுக்குழுவினர் இணைப்பதிகாரியுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்கள்.

# நடந்து சென்றவர்கள் இப்படி செய்தார்களாம்

(கல்வியங்காடு)

அரியாலை கனகரத்தினம் வீதிவழியாக நடந்து சென்ற வர்கள் இவ்வீதியில் உள்ள இரு வீடுகளில் புகுந்து ஒருவர் வீட் டில் 500 ரூபா பணத்தையும் இன்னொருவர் வீட்டில் இருந்த பெண்மணியிடமிருந்து அவர் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் சங்கிலியையும் வாங் கிச்சென்றனராம். மேலும் கொழும்புத்துறை வீதியில் முட்டைகளையும், பணமும்பெற் றுச்சென்றதாகவும் கூறப்படு கிறது.

## பிரிட்டனில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கைத் தமிழ் அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவே இப்பத்து குடும்பங்களும் மீண்டும் இலங்கை திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறப் பட்டது.

மேலும் பலர் அடுத்த சில வாரங்களில் பிரிட்டன் வெளி விவகார அமைச்சினால் இலங் கைக்குத் திருப்பி அனுப்பப் படலாம் என்று அறிவிக்கப் பட்டது (கி)

## செட்டிகுளம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்கள் இப்போது அச் சத்தால் வெளியேறுகிறார் கள்.


# மரண அறிவித்தல்

## அப்பாப்பிள்ளை கெங்காதரம்

கந்தரோடை, அப்பாப்பிள்ளை கெங்காதரம் இயற்கை எய்திவிட்டார். இவர் வடபிராந்திய விற் பனைத் திணைக்கள முன்னைய பிரதம இலிகிதரும், கணேஸ்வரியின் அன்புக் கணவரும், கோமதியின் தகப் பனுரும், திருமதிகள் பகவதி கந்தையா, சிவபாக் கியம் கைலாசபிள்ளை, சோதிமதிஅம்மா கார்த்திகேசு (மலேசியா), யோகரத்தினம்மா வீரசிங்கம், தேவ ராசன் (விற்பனைத் திணைக்கள காரியாலயம், வடபிராந் தியம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார். ஈமக்கிரி யைகள் 29-5-85 புதன்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெறும். உற்றுர், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அ. தேவராசன்

கந்தரோடை,
சுன்ளுகம். (3514)



# மரண அறிவித்தல்

## சி. வேலுப்பிள்ளை (நடராசா)

நீ 251, நாவலர் ரோட் சின்னத்தம்பி வேலுப் பிள்ளை (நடராசா) இளைப்பாறிய கச்சேரி சிறுப்பர் அவர்கள் சிவபதமடைந்துவிட்டார்கள். அன்னுர் தெய்வநாயகியின் அன்புக் கணவரும், சற்குணராஜன் (நீர்ப்பாசன இலாக்கா, முருங்கன்), காலஞ்சென்ற ஜெகமலரின் அருமைத் தந்தையும், நிர்மலசோதியின் அருமை மாமனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று (29-5-85) காலை 9-00 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தகவல்: வே. சற்குணராஜன்

(3510)


## பஸ்சேவை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த இரு தினங்களாக சுமார் 60 தபால் பைகள் அனுப் பப்படாமல் இருப்பதாக கூறப் படுகிறது.

இதுதவிர பிற இடங்களிலி ருந்து யாழ்ப்பாணம்வரும் தபால்பைகளும் வந்துசேர வில்லை. (க)

## வவனியா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளைஅடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார்சைக்கிளில் வந்த இனம்தெரியாத இரு வாலிபர் களே இக் கொள்ளையினை நடத்தியுள்ளார்கள் என தெரியவருகின்றது.

## சேவிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் ஒன்றில் சென்ற 5 இனந்தெரியாத நபர்கள் இயக்கமொன்றின் பெயரைச் சொல்லி சேவிஸ் நிலைய காவ லாளியைப் பயமுறுத்திவிட்டு கொள்ளையடித்ததாகத் தெரி விக்கப்படுகிறது

2பரல் என்ஜின் ஓயில், 25 கலன் ஓயில், 5ட்ராக்டர் ரயர்கள், ஒரு காற்றடிக்கும் பம்ப், ஒரு ட்றக் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது. (மா)

## ஊழியர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவைச் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் தொழிலதிபர் ச, இராசரத்தினத்தின் விடு தலையைவேண்டி அவரது மின் தறி, அரிசிஆலை ஊழியர்கள் நேற்று காலை தொடக்கம் உண்ணுவிரதத்தை ஆரம்பித் துள்ளனர். இதில் பொதுமக ளும் கலந்துகொண்டனர்.

இன்று இவ்வூர் பொதுமக் கள் பெருமளவில் கலந்து தமது அனுதாபத்தைத் தெரி விக்க உத்தேசித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. [க]

## ஜனதிபதியின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது பற்றி செய்தி சொல் லாததும் ஆச்சரியமல்ல!

அநுராதபுரத்தில் இராணுவ முகாமில் தஞ்சமடைந்த தமிழ் அகதிகள் 25 பேர் மீதும் அந்த முகாமிலிருந்த ''வீரர் களுள்'' ஒருவரான ஒரு கோப் ரல் வீரத்துடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஆறு அகதி களைக் கொன்று மற்றையோ ரைக் காயப்படுத்திய சம்பவங் களையும் தொலைக்காட்சியில் காண்பிக்காததும் ஆச்சரிய மல்ல.

ஆனல் அந்த இராணுவ வீரரான ''கோப்ரலுக்கும்'' அவரைக் கடைசியில் சுட்டுக் கொன்றதாகக் கூறப்படும் உயர் இராணுவ அதிகாரிக்கும் நாட்டு மக்கள் ,,வீர அஞ்சலி செலுத்துவதற்காகவாவது தொலைக்காட்சியிலும், மற் றும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலமும் காண் பிக்காதது தான் ஆச்சரியம்!

### இனப்பிரச்னையா மார்க்ஸிஸமா?

பயங்கரவாதிகளுக்கு இனப் பிரச்னையில் அக்கறையில்லை யென்றும் ஜனநாயக முறை யில் தெரிவுசெய்யப்பட்ட அர சைக் கவிழ்ப்பதே அவர்கள் நோக்கமென்றும் அவர்களின் பிரசாரம் மார்க்ஸிய அடிப் படையைக் கொண்டதென் றும் ஜனதிபதி கூறுகிறுர்.

முதலில் இனப்பிரச்னைக்குத் தீர்வு காணக்கூடிய தமிழ்மக் கள் இந்நாட்டில் சுயமரியாதை யுடனும் பாதுகாப்புடனும் வாழக்கூடிய ஒருவழியை அரசு அமைத்துக் கொடுத்தபின் மார்க்ஸிய போராட்டம் எப் படி மறைகிறதென்பதைப் பார்த்துவிடலாமே!

## ஜே. ஆர்...,

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரிக்கா முதலிய நாடுகளுக்கு புறப்படுவதற்குமுன் இந்த உச்சிமாநாடு நடைபெறவேண் டும் என இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன ஆர்வம் காட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்னை மிகமோசமாக ஒரு கட்டத்தை எட்டியிருப்பதனுல் கூடியவிரை வில் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு இந்தியா எல்லா வகையிலும் உதவ வேண்டும் என பிரதமர் ரஜீவ் காந்திகருதுவதால் இச்சந்திப்பு எவ்வளவு விரைவாக, முடியு மானுல் இடம்பெற்றேயாக வேண்டும்என அவர் வலியுறுத் துவதாக தெரிகின்றது.

இலங்கை இனப்பிரச்னைக்கு விரைவாக அரசியல் தீர்வு ஒன்று காணப்படாவிடில் அதுமேலும் சிக்கலடைந்து நாட்டின் பொருளாதாரத் தில் பாரிய சீர்குலைவுகளை ஏற் படுத்துமென கொழும்பில் உணரப்பட்டுவருவதாக டில்லி வட்டாரங்கள் கருதுகின்றன

## ஒக்ஸிஜின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தூதுக்குழு நேற்று இணைப்பதிகாரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இச்சந்திப்பு கோட்டைக்குள் நடைபெற்றது.

கடந்த இரண்டு மாத கால மாக யாழ். மாவட்டத்தில் காஸ் சிலிண்டர்கள் விநியோ கத்தில் தடை ஏற்பட்டுள்ள தால், ஆயிரத்துக்கு மேற் பட்ட தொழிலாளர்கள் வேலை யிழந்திருப்பதாகவும், அவர் களை நம்பி வாழும் குடும்பங் கள் பெரும் கஷ்டங்களை அனு பவிப்பதாகவும், வெகுஜன இயக்கத்தூதுக்குழு இணைப் பதிகாரியிடம் விரிவாக எடுத் துக்கூறியது.

இக்குழுவில் இயக்கத்தின் தலைவர் திரு வை இராஜசுந்த ரம், பொதுச் செயலாளர் திரு. சோ தேவராஜா, யாழ். கிளையைச்சேர்ந்த தலைவர் டாக்டர் ஜி. செபத்தியாம் பிள்ளை, ஜி. ஆர். இராஜசிங் கம், காஸ்வெல்டிங் உரிமை யாளர்-தொழிலாளர் சார்பில் திரு இ. செல்வநாயகம் ஆகி யோர் இடம்பெற்றனர். [மா]

## அனுராதபுரம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் முறைப்பாடுகளைப் பொலிஸில் பதிவு செய்வதற்கு 'பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புச்குழு' நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தங் கள் முறைப்பாடுகளை மூன்று பிரதிகளில் தயாரித்து அவ ற்றை 'பாதிக்கப்பட்ட ஊழி யர் இணைப்புக்குழு' அலுவலக த்தில் ஒப்படைக்கும்படி இணைப்புக்குழுச் செயலாளர் திரு. ஐ தி. சம்பந்தன் கேட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் பாதிக்கப் பட்ட ஊழியர்களின் விபரப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அரசாங்க அதிபரிடம் கைய ளிக்கப்படும் என்றும் செயலா ளர் தெரிவித்துள்ளார். [மா]

## கூட்டணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தற்போது ஏற் பட்டுள்ள நிலைமைகளையும் தமது ஆஸ்திரேலிய விஜயம் பற்றியும் இந்திய அதிகாரிக ளுக்கு எடுத்துக்கூறவே திரு. அமிர்தலிங்கம் புதுடில்லி விரைந்ததாகத் தெரிகின்றது.

## ஆள் கடத்தல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முத்து நேற்று நடத்திய சமா தானக் கூட்டத்தில் வலியுறுத் தினர்.

காத்தான்குடியில் சிலதினங் களுக்குமுன் இடம்பெற்ற அசம் பாவிதம் தொடர்பாக இந்த அமைதி மகாநாடு இடம்பெற் றது.

இம்மகாநாட்டில் கலந்து கொண்ட மட்டக்களப்பு 2வது எம். பி. ஜனுப் பரித்மீரா லெப்பை எரிக்கப்பட்ட 25வீடு களையும் வெளிநாட்டு உதவி யைக்கொண்டு கட்டிக் கொடுக்க முயற்சி எடுப்பதாக உறுதியளித்தார்.

இரு சமூகங்களையும் சேர்ந்த பிரமுகர்களும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

### பூஸா இளைஞர்கள்

பூஸா முகாமிலிருந்து மட் டக்களப்பு இளைஞர்கள் 11பேர் நேற்று மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர். பூஸாவில் இன் னும் 70 கிழக்கு மாகாண இளைஞர்கள் இருக்கிறுர்கள். இவர்களும் விரைவில் விடுவிக் கப்படுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லமுத்து கந்தையா

வண்ணுர்பண்ணை சிவலிங்கப் புளியடியைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து கந்தையா 28-5-85ல் காலமா ஞர். அன்னுர் கந்தையாவின் அன்பு மனைவியும், P.K. பாலசிங்கம் (கல்வி அமைச்சின் முன்னைநாள் விஞ்ஞான பாட எழுத்தாளர், ஆசிரிய ஆலோசகர் [விஞ்ஞானம்] பாடவிதான அபிவிருத்தி நிலையம், கொழும்பு, உரும்பி ராய் இந்துக்கல்லூரி யாழ் மத்தியகல்லூரி முன்னைநாள் ஆசிரியர்). P K குமாரகுலசிங்கம் (நீர்ப்பாசனத் திணைக் களம், முருங்கன்), செல்வி யோகேஸ்வரி (ஆசிரியை, யாழ் இந்துமகளிர் கல்லூரி), திருமதி இராஜேஸ்வரி சுந் தரநடராஜன் (ஆசிரியை, குமரபுரம் இந்து மகளிர் மகாவித்தியாலயம்), திருமதி இரத்தினேஸ்வரி ஜெய பாலன் ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி சிவபதிமலர், பாலசிங்கம், திருமதி தவமணி குமார குலசிங்கம், திரு ந. சுந்தரநடராஜன் (ஆசிரியர் வன் னேரிக்குளம், ம. வி), திரு இ ஜெயபாலன் (நிர்வாக அதிகாரி, நெற்சந்தைப்படுத்தும் சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வைத்தியர் க. சி துரைராஜா, காலஞ்சென்ற திரு மதி பஞ்சேன்மணி சின்னத்துரை, திருமதி சிவபாக் கியம் வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், பாலசங்கர் (யாழ். இந்துக் கல்லூரி), பாலமயூரகன் (யாழ். மத்திய கல்லூரி), துதிப்பிரியா, பிரிய லக்ஷ்ன, சாந்திபூஷண், மேனகா சாந்தி, ஜனிதா சாந்தி ஆகி யோரின் அன்புப் பட்டியும் ஆவார்.

அன்னுரின் பூதவுடல் 30-5-85 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு 478/3, K K. S. வீதி இல் லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
P. K. பாலசிங்கம்

478/3, K. K. S. வீதி.
யாழ்ப்பாணம். [3515]


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu PO, Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126